கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

பொருள்:– தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

**பழநி நகராட்சி**

2021–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 –ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் பழநி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலவலகம், பழநி.
நாள்.23.08.2021

தனி அலுவலர்
பழநி நகராட்சி

**கூட்டப்பொருள்**

1.) இந்நகராட்சியில் பயன்பாட்டில் இருந்த சுத்த நகல் எடுக்கும் மூன்று இயந்திரங்கைள் (Xerox Mechine) பழுதடைந்துள்ளதால் ஜெராக்ஸ் எடுப்பதில் மிகவும் சிரமமாக உள்ளது. தற்பொழுது 2020–2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர வசூல் பணிக்கு வரி விதிப்புதாரர்களுக்கு அறிவிப்புகள் நகல் எடுக்கவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை மற்றும் மாவட்ட ஆட்சியாளர் திண்டுக்கல் ஆகிய அலுவலகங்களுக்கு விவரப்படிவம் நகல்கள் எடுத்து அனுப்ப வேண்டி உள்ளதாலும், தேர்தல் பணிகள் நடைபெற்றுக் கெண்டிருப்பதாலும், மேலும் திட்டப் பணிகளுக்கான பிரேரணைகள் தயார் செய்து நகல் எடுக்க வேண்டி உள்ளதாலும், அலுவலகத்தில் உள்ள மூன்று ஜெராக்ஸ் இயந்திரம் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி பெறவும், உத்தேச செலவினம் ரூ. 1,50,000/– க்கு குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி செய்யவும் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3162/2020/பி3).
தனி அலுவலரின் நியமனம் எண்.1451/நாள்.28.12.2020 அன்று மேற்படி, பொருளில் விலைப்புள்ளி அளித்தவர் பெயர் தவறுதலாக உள்ளதால் மேற்படி பொருள் நீக்கம் செய்து Hindustan Automation, Coimbatore விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.

2) பழநி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகள் மற்றும் பேருந்து நிலையம் போன்ற பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா போன்ற தொற்றுகள் பரவாமல் தடுக்கும் பொருட்டு, கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள புகைமருந்து அடிக்கும் இயந்திரத்திற்கு எரிபொருள் ( நாள் ஒன்றுக்கு 38 லிட்டர் டீசல், 9 லிட்டர் பெட்ரோல் ) தேவைப்படுவதால் பொது சுகாதார நலன் கருதி புகைமருந்து அடிக்கும் இயந்திரத்திற்கு தேவையான எரிபொருளின் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்திட ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் கூட்டத்தில் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி, நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2101/2012/எச்2).

3) பழநி நகரில் நகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள ஆண்கள், பெண்கள் இருபாலரும் பயன்படுத்தும் கழிவறைகள் மராமத்துப் பணிக்கு பொதுநிதி 2020–2021–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 5.70 இலட்சத்திற்கு 07.07.2021–ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.R.செல்லத்துரை,<br>த/பெ.ராமசாமி கவுண்டர்,<br>அன்னமார் கோவில் தெரு,<br>அமரபூண்டி, பழநி (TK) | 0.17% மதிப்பீட்டிற்கு குறைவு<br>முன்வைப்புத் தொகை ரூ.5700/–<br>சலான் எண் ந.செ.சீ.எண்.080/1–1–21–22/0000435, நாள்.27.04.2021. |
| 2 | திரு.R.ரவிக்குமார்,<br>த/பெ.ரெங்கசாமி,<br>16/195,பாட்டாளித் தெரு,<br>பழநி (TK) | 1.40% மதிப்பீட்டிற்கு அதிகம்,<br>முன்வைப்புத் தொகை ரூ.5700/–<br>சலான் எண் ந.செ.சீ.எண்.080/1–1–21–22/0000436, நாள்.27.04.2021. |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண் –1ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு. R.செல்லத்துரை, என்பவர் 0.17% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார், எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2) குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம், முன்னனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதும் ஏற்கலாம். (ந.க.எண்.123/2019/இ1).

4) பழநி நகராட்சியில் 15 வது மத்திய நிதி ஆணைய நிதி ஒதுக்கீடு 2021–2022–ம் ஆண்டுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித எண்.7979/2020/LA3, நாள். 31.03.2021–ல் 91,34,220/– மற்றும் 20452/2020/ LA3, நாள்.30.06.2021–ல் 91,34,950/– எனவே வரப்பெற்றுள்ள மொத்த ரூ.1,82,69,900/– விடுவிக்கப்பட்டுள்ள நிதியில் கீழ்கண்ட அத்தியாவசிய பணியான பைப்லைன் பதிக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு நிர்வாகச அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.32 மற்றும் 33–ல் (JICA) திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் 100mm DI பைப் பதிக்கும் பணி. | ரூ.9.00 |
| 2 | வார்டு எண்.29,30 மற்றும் 31–ல் (JICA) திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் 100mm DI பைப் பதிக்கும் பணி. | ரூ.20.00 |
| 3 | (JICA) திட்டத்தில் விடுபட்ட பகுதியான நான்குரத வீதியில் 100 mm DI பைப் பதிக்கும் பணி. | ரூ.20.00 |
| 4 | வார்டு எண்.16 மற்றும் 17–ல் (JICA) திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் 100mm DI பைப்பதிக்கும் பணி. | ரூ.23.50 |
| 5 | வார்டு எண்.8,9,10,11,12,123,14 மற்றும் 15–ல் (JICA) திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் 100mm DI பைப்பதிக்கும் பணி. | ரூ.23.50 |
| 6 | வார்டு எண்.5 மற்றும் 6–ல் (JICA) திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் 100mm DI பைப் பதிக்கும் பணி. | ரூ.23.50 |
| 7 | வார்டு எண்.1,2,3 மற்றும் 4–ல் (JICA) திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் 100mm DI பைப்பதிக்கும் பணி. | ரூ.21.00 |
| 8 | வார்டு எண்.17–ல் சுபாஸ் சந்திரபோஸ் சிலை முதல் மேற்குரதவிதி மேல்நிலைத் தொட்டிவரை 250 mm DI பைப் பதிக்கும் பணி. | ரூ.21.00 |
| 9 | வார்டு எண்.23 பழைய நகராட்சி அலுவலகம் முதல் பெரிய கடைவீதி வரை 250 mm DI பைப் பதிக்கும் பணி | ரூ.21.00 |
| 10 | பழநி நகராட்சக்க கொந்தமான உரக்கிடங்கில் 5 HP மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் விநியோகிக்கும் பணி. | ரூ.0.70 |
| | மொத்தம் | ரூ.182.70 |

**அலுவலக குறிப்பு**
15வது மத்திய நிதிக்குழு ஆணைய நிதி ஒதுக்கீடு 2021-2022 -ம் ஆண்டுக்கு ரூ.182.70 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

5) பழநி நகராட்சிக்கு சொந்தமான பாலாறு மற்றும் கோடைகால நீர்தேக்கத்திற்கு தேவையான கேஸ் குளோரின் 900kg சிலிண்டர் உய அங்கீகாரத்துடன் வாங்கி வைத்து பயன்படுத்தும் பணிக்கு பொது நிதி 2021-2022-ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.50/- இலட்சத்திற்கு 13.08.2021-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1 | M/s.Shri Sathiya Dyes and Chemicals.<br>1/123, ஆசாரிபட்டி ரோடு,<br>ஆண்டிப்பட்டி<br>தேனி. | 0.24% மதிப்பீட்டிற்கு குறைவு<br>முன்வைப்புத் தொகை ரூ.9800/-<br>சலான் எண்.ந.செ.சீ.எண்.080/1/1/21-22/0002899 நாள்.12.08.2021 |
| 2 | People Chemical Industries,<br>4/497, ஆசாபட்டி மெயின் ரோடு,<br>தேனி. | 0.24% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>முன்வைப்புத் தொகை ரூ.9800/-<br>சலான் எண்.ந.செ.சீ.எண்.080/1/1/21-22/0002900 நாள்.12.08.2021 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் M/s.Shri Sathiya Dyes and Chemicals. தேனி என்ற நிறுவனம்-என்பவர் -0.24 % சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.(ந.க.எண்.4353/2007/இ2).

6) பழநி நகராட்சி பொறியர் பிரிவின் பயன்பாட்டில் உள்ள JCB வாகனம் எண் TN 57 AX 5944-க்கு கீழ்க்கண்ட மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 1) இன்ஜின் புள்ளி ஆயில் சீலர் 2) இன்ஜின் ஆயில் பில்டர் 3) வாட்டர் பம்ப் அசெம்பிளி 4) ஐடிலர் புள்ளி கியர் 5) பெல்டென்சன் மற்றும் புதிய பெல்ட் 6) ஹெட் கேஸ்ட் 7) வால்வு வயரிங் மற்றும் ரேடியேட்டர் சர்வீஸ் 8) Exide 12V- 130 AH Battery போன்ற இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.50,000/- க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

7) பழநி நகராட்சிக்கு சொந்தமான இராஜ கோபால் பூங்காவில் பெரிய மரங்கள் நிறைய உள்ளன. அதில் கிளைகள் அதிகம் உள்ளது. இக்கிளைகளில் இருந்து பூச்சிகள் மற்றும் தற்போது காத்தடி காலமாக உள்ளதால் காற்றிற்கு மரக்கிளைகள் அருகில் உள்ள குடியிருப்புகளில் விழும் சூழ்நிலை உள்ளது. என அப்பகுதி பொது மக்கள் சாலையில் பேருந்து மறியல் செய்தனர்.

அப்பொழுது ஆர்.டி.ஓ, தாசில்தார்,ஆணையாளர் மற்றும் சார்பு காவல் ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்தை நடத்தியதில் மரக்கிளைகளை வெட்டி அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. எனவே, பொது மக்களின் நலன் கருதி மரக்கிளைகளை உடன் வெட்டி அப்புறப்படுத்த உள்ளூர் மரம் வெட்டும் தொழிலாளர்களை வரவழைத்தும், கிரேன் உதவியுடனும் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டது. வெட்டு கூலியாக இரண்டு நபர்களுக்கு ரூ.20000/- மற்றும் கிரேன் வாடகை ரூ.22000/-ம் இந்நகராட்சி இளநிலைப் பொறியாளர் திரு.பி.செல்லத்துரை அவர்களால் மொத்த செலவினத் தொகை ரூ.42000/- செலவிடப்பட்ட தொகையினை அன்னாருக்கு பொதுநிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

8) பழநி நகராட்சிக்கு சொந்தமான விவேகானந்தர் தெருவில் அமைந்துள்ள ஓட்டுநர் குடியிருப்பு மராமத்து பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00/- இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

செலவினத்தை தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.123/2019/இ1)

9) பழநி நகராட்சிக்குட்பட்ட 17–33 வார்டுகளில் உள்ள மினிபவர்பம்ப் பராமரிப்பு பணிக்கு குடிநீர் நிதி 2020–2021–ல் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9.90 இலட்சத்திற்கு மேற்கொள்ள 13.07.2021–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.H.மொஹமட் ரேஷ்மி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>ஒட்டன்சத்திரம். | –0.09% மதிப்பீட்டிற்கு குறைவு<br>முன்வைப்புத் தொகை ரூ.10000/–<br>TMB வங்கி வரைவோலை எண்005099, நாள்.12/07/2021. |
| 2 | திரு.நா.கருப்புச்சாமி,<br>18/32, டி.கே.எண்.புதுர்,<br>ஆயக்குடி (Po)<br>பழநி (TK) | 0.43% மதிப்பீட்டிற்கு அதிகம்.<br>முன்வைப்புத் தொகை ரூ.10000/–<br>TMB வங்கி வரைவோலை எண்005100, நாள்.12/07/2021. |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண் –1ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.H.மொஹமட் ரேஷ்மி என்பவர் –0.09% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார், எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு

1) குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம், வழங்கியதும் ஏற்கலாம். (ந.க.எண்.123/2019/இ1).

10) பழநி நகராட்சிக்குட்பட்ட அருள்ஜோதி வீதியில் உள்ள நடமாடும் கழிவறைகள் மராமத்துப் பணிக்கு பொது நிதி 2020–2021–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 4.60 இலட்சத்திற்கு 07.07.2021–ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.R.செல்லத்துரை,<br>த/பெ.ராமசாமி கவுண்டர்,<br>அன்னமார் கோவில் தெரு,<br>அமரபூண்டி, பழநி (TK) | 0.59% மதிப்பீட்டிற்கு குறைவு<br>முன்வைப்புத் தொகை ரூ.4600/–<br>சலான் எண் ந.செ.சீ.எண்.080/1–1–21–22/0000448, நாள்.27.04.2021. |
| 2 | திரு.R.ரவிக்குமார்,<br>த/பெ.ரெங்கசாமி,<br>16/195,பாட்டாளித் தெரு,<br>பழநி (TK) | 1.53% மதிப்பீட்டிற்கு அதிகம்,<br>முன்வைப்புத் தொகை ரூ.4600/–<br>சலான் எண் ந.செ.சீ.எண்.080/1–1–21–22/0000439, நாள்.27.04.2021. |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண் –1ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு. R.செல்லத்துரை, என்பவர் 0.17% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார், எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2) குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம், முன்னனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதும் ஏற்கலாம். (ந.க.எண்.123/2019/இ1).

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள்.30 –07–2021

தனி அலுவலர்
பழனி நகராட்சி.